# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
### இலக்கியநயம்

| தரம் :- 10 | சுட்டெண்:- ........................................... | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

➢ **முதலாம், இரண்டாம், பகுதி வினாக்களுக்கும் மூன்றாம் பகுதியிலுள்ள எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.**

பகுதி - I

01) வகுப்பறையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

i) வகுப்பறையில் மேற்கொண்ட கணிப்பீட்டுக் கருவி ஒன்றின் பெயரைத் தருக.

ii) எவ்வலகில் இக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது?

iii) இக்கணிப்பீட்டினை மேற்கொள்ள ஆசிரியர் வழங்கிய ஆலோசனைகள் இரண்டு தருக.

iv) இக்கணிப்பீட்டினால் நீர் பெற்ற நன்மைகள் எவை? (10 புள்ளிகள்)

02) எல்லா வினாக்களுக்கும் சுருக்கமான விடை எழுதுக.

i) பாரதிதாசன் எங்கு பிறந்தார்? அவரது இயற்பெயர் என்ன?

ii) புத்தகமும் நானும் - சையோகம் புரிந்ததொரு வேளைதனில்....... இவ்வரியில் இடம்பெற்றுள்ள ‘சையோகம்’ என்பதன் பொருள் யாது?

iii) பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன?

iv) மரம் உயர்திணை என்பதற்கு பத்தி ஆசிரியர் கூறும் காரணங்கள் மூன்று கூறுக.

v) கன்.்.பூஷியஸ் மரணப்படுக்கையில் இருக்கும் போது தமது சீடர்களுக்குக் கூறிய கடைசிச் செய்தி என்ன?

vi) வாய்மொழிப் பாடல்களின் மறுபெயர்கள் மூன்று கூறுக.

vii) மருத்துவிச்சிப் பாடல்களில் குறிப்பிடப்படும் உணவுப் பொருட்கள் எவை?

viii) ‘கடிநகர்’ என்பதன் பொருள் யாது?

ix) ‘அமுதம்’ என்னும் கவிதை எந்தப் பாட்டில் சித்தரிக்கப்பட்டுள்ளது?

x) முனிதயிர் பிசைந்த காந்தன் மெல்விரல்..... என்னும் பாடல் ஆசிரியர் யார்?

(2 × 10 = 20 புள்ளிகள்)

03) பின்வரும் செய்யுளினதும் உரைப் பகுதியினதும் பொருளை உமது மொழிநடையில் எழுதி தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்பினை விளக்குக.

அ) தங்க வளையல்கள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா - இதில்
அங்கமெ லாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்பு கலந்ததையா

ஆ) “வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும் மென்மையானவை நீண்டநாள் இருக்கும் எனவே நீங்கள் மென்மையானவர்களாயிருங்கள் நீண்ட நாள் வாழ்வீர்கள். இதுதான் உங்களுக்கு என் கடைசிச் செய்தி” என்றார்.

(2 × 10 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

04) கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழர்களுக்குத் தமிழ்மொழியில் சுவடிச்சாலை
சர்வகால சாலையைப்போல் எங்கும் வேண்டும்
தமிழில்லாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழில் கவிதை நூற்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்
சுமைசுமையாய் சேகரித்துப் பல்கலை சேர்
துறைதுறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

i) சுவடிச்சாலை எதனைப் போல் அமைதல் வேண்டும் எனக் கவிஞர் கூறுகிறார்?

ii) பிறமொழி நூல்களை நாம் எவ்வாறு பயன்படுத்தல் வேண்டும்.

iii) செந்தமிழுக்குத் தரப்பட்ட உவமானம் எது?

iv) பாடலில் இடம்பெற்றுள்ள அடுக்குமொழிகள் எவை?

v) ஒத்த கருத்துத் தருக.

1) சுவடிச்சாலை

2) நூல்

(5 × 4 = 20 புள்ளிகள்)

## பகுதி - III

➢ **எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக.**

01) புத்தகசாலையின் அவசியம் பற்றி கவிஞர் யாது கூறுகிறார்? (15 புள்ளிகள்)

02) மரம் உயர்திணை என்பதற்கு பத்திரிகையாளர் கூறும் காரணங்கள் எவை? (15 புள்ளிகள்)

03) மருத்துவிச்சி வாழ்த்தின் மூலமாக குழந்தை ஒன்று கண்டுவந்த காட்சிகளை கவிஞர் எவ்வாறு சித்திரிக்கின்றார்? (15 புள்ளிகள்)

04) ‘இனிது என’ என்ற பாடப்பரப்பில் மனைவியின் சமையல் இரகசியம் யாதெனக் கவிஞர் கூறுகிறார்? (15 புள்ளிகள்)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**